முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

வழக்கு எண். ஐ.டி.ஒ.பி.எண். 28/2015

2021-ம் வருடம் பிப்ரவரி மாதம் 23-ம் நாள் செவ்வாய்கிழமை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஜோசப் கென்னடி | தந்தை பெயர் | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| தொழில் | : | | வயது | : | |

P.W.1 - என்பவரது வாக்குமூலம் (1873-ம் வருடத்திய 10-வது விதியின் படி என்பவரால் ஆணையிடப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

தேதி : 23.02.2021.

## முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர். நான் எதிர்மனுதாரருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கூறி விவாகரத்து மனு தாக்கல் செய்திருந்தேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே 21.01.2001 அன்று திருமணம் நடந்தது. மேற்படி திருமணத்தின் விளைவாக எங்களுக்கு இலக்கியா என்ற பெண் குழந்தையும் அடால்ஃரூஷோ என்ற பெயரில் ஆண்குழந்தையும் உள்ளது. நாங்கள் இருவரும் 15 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எங்களுக்குள் மனக்கசப்பு அதிகமாக உள்ள காரணத்தாலும், தற்போதுள்ள சூழ்நிலையில் நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ வாய்ப்பு இல்லை. ஆனால் குழந்தைகளின் நலன்கருதி எங்களுடைய விவாகரத்து குழந்தைகளின் எதிர்கால நலனை பாதிக்கும் என்ற காரணத்தால், எனக்கு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றாலும், பிற்காலத்தில் ஏற்படும் மன மாற்றங்களை மனதில் கொண்டு நான்கு வருடங்கள் பிரிந்து வாழ உத்தரவிட்டால் போதுமானது. மேலும், இன்று எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஒத்துக்கொண்டது போல் என்மீது தாக்கல் செய்திருக்கும் குற்ற வழக்கை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். மேலும், ஏற்கனவே நான் கொடுத்து வரும் மாதம் ரூ.8000/- இடைக்கால பொருளுதவியை இந்த மாதத்திலிருந்து மாதம் ரூ.12000/- ஆக உயர்த்தி மறு உத்தரவு வரும் வரை எதிர்மனுதாரருக்கும், என் குழந்தைகளுக்கும் கொடுக்க தயாராக உள்ளேன். மேற்சொன்ன அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கபடலாம்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.

முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை
வழக்கு எண். ஐ.டி.ஒ.பி.எண். 28.2015
2021-ம் வருடம் பிப்ரவரி மாதம் 23-ம் நாள் செவ்வாய்கிழமை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. லீமா ரோஸ் | தந்தை பெயர் | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| தொழில் | : | | வயது | : | |

R.W.1 - என்பவரது வாக்குமூலம் (1873-ம் வருடத்திய 10-வது விதியின் படி என்பவரால் ஆணையிடப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.
தேதி : 23.02.2021.

## முதல் விசாரணை

நான் இந்த மனுவின் எதிர் மனுதாரர். மனுதாரர் என் கணவர், எனக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கூறி விவாகரத்து மனு தாக்கல் செய்திருந்தார். நானும், மனுதாரரும் சுமார் 15 வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம். மேலும், மனுதாரர் மீது நான் வரதட்சனை கேட்டதாகவும், கொடுமை படுத்தியதாகவும் ஏற்கனவே புகார் கொடுக்கப்பட்டு, அந்த புகார் ஆலங்குடி நடுவர் நீதிமன்றத்தில சி.சி.எண்.26/2016 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வாய்ப்பில்லை. ஆனால் குழந்தைகளின் நலன்கருதி எதிர்கால மனமாற்றங்களை கருத்தில்கொண்டு எங்கள் இருவரையும் நீதிமன்றம் உத்தரவிடும் காலம் வரை பிரிந்து வாழ உத்தரவிடலாம். மேலும், மனுதாரர் எனக்கும் என் குழந்தைகளுக்கும் இந்த மாதத்திலிருந்து ரூ.12000/- வாழ்க்கை பொருளுதவியாக கொடுப்பதை ஏற்கிறேன். மேலும், என் கணவர் மீது இருக்கும் குற்ற வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன். மேற்சொன்ன சமாதானத்தின் அடிப்படையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படலாம்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.